Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165174

1. District : திருப்பூர் மாவட்டம் | PS: இல.த.க.பிரிவு திருப்பூர் காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 01/2025/AC/TPR மு.த.அ. எண் | Date: 7.3.2025 நாள்

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended in PC (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 5.3.25 நாள் முதல் | Date to : 6.3.25 நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : சுமார் 13.30 மணி நேரம் முதல் | Time to : சுமார் 13.30 மணி நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 7.3.25 | Time நேரம் : 07.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் பகுதி I | Time நேரம் : 07.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 25 கி.மீ. வடகிழக்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — | District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R.K. கார்த்திகேயன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. கந்தசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42 வயது | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் மக்கள் பணி | (g) Address : முகவரி கதவு எண். 3, அம்மன் நகர், முருகம்பாளையம், வஞ்சிபாளையம் போஸ்ட், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. பிரபு, கிராம நிர்வாக அலுவலர், எடையபாளையம் மற்றும்
   2) கவிதா, கிராம நிர்வாக அலுவலகம், எடையபாளையம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 07/03/2025

[signature] 7/3/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 7.3.25
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் டி. கீதாலட்சுமி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
[illegible], திருப்பூர்

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண்.01/2025/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் B.கீதாலட்சுமி ஆகிய நான் 07.03.2025-ம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது R.K.கார்த்திகேயன், 42, த/பெ.R.கந்தசாமி, கதவு எண். 3, அம்மன் நகர், முருகம்பாளையம், வஞ்சிபாளையம் போஸ்ட், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாககொடுத்தபுகாரின் விபரம் பின்வருமாறு 07.03.2025 அனுப்புநர், R.K.கார்த்திகேயன், 42, த/பெ.R.கந்தசாமி, கதவு எண். 3, அம்மன் நகர், முருகம்பாளையம், வஞ்சிபாளையம் போஸ்ட், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர் மாவட்டம். ஐயா, நான் திருப்பூர், வஞ்சிபாளையத்தில் என் குடும்பத்துடன் குடியிருக்கிறேன். நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். புதிய வீடு கட்டுபவர்களுக்கு குடிநீர் மற்றும் மின் இணைப்பு பெற்று தருவது, வீடு மற்றும் கம்பெனிகளுக்கு வருடாந்திர வரி செலுத்துவது, விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு பெற்று தருவது, மேலும் பல வேலைகளை அவர்கள் சார்பாக செய்கிறேன். அதற்கு நான் வேலைக்கு தகுந்தார்போல் கட்டணம் பெறுவேன். கடந்த 21.01.2025ம் தேதி திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி, பூலுவபட்டி அஞ்சல், விக்னேஸ்வரா நகர் கதவு எண். 8/79A3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.பழனிசாமி அவர்களின் மகன் P.சசிகுமார் மற்றும் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி, குமாரானந்தபுரம் இரண்டாவது வீதி, காமராஜர் கிழக்கு கதவு எண். 23/12A, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.பூபதி அவர்களின் மனைவி B.சாரதாமணி ஆகியோர் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி மண்ணரை கிராமம் தொட்டிய மண்ணரை பிள்ளையார் கோயில் தோட்டம், கதவு எண். 2/7 என்கிற முகவரியில் வசித்து வரும் ரங்கசாமி மகன் R.நடராஜ் என்பவரிடமிருந்து ஊத்துக்குளி தாலுக்கா, கொமரகவுண்டன்பாளையம் கிராமத்தில் ரீ.சர்வே எண். 25/3A2ல் சுமார் 2.23 1/2 ஏக்கர் விவசாய பூமியை குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண

07/3/25

எண். 329/2025 மூலம் கிரையம் பெற்றுள்ளனர். இந்த பூமியில் ஆழ்துளை கிணறு உள்ளது. அந்த ஆழ்துளை கிணற்றிற்கு இலவச மின் இணைப்பு பெற வேண்டி சசிகுமார் மற்றும் பூபதி ஆகியோர் என்னை அணுகி ஆவணங்களை கொடுத்து அவர்கள் சார்பாக நான் வேலைகளை கவனிக்க எழுத்து பூர்வமாக அங்கீகார கடிதம் கொடுத்தார்கள். நான் அதனை பெற்று அந்த ஆழ்துளை கிணற்றில் உள்ள 5HP மோட்டாருக்கு இலவச மின் இணைப்பு வேண்டி கடந்த 19.02.2025ல் இரண்டு முறை விண்ணப்பித்தேன். அதில் உரிமை சான்று, பட்டா, சிட்டா அடங்கல், புல வரைபடம் வேண்டும் என்று டவுன் குன்னத்தூர் மின்வாரிய AE அவர்கள் கூறினார். அதனால் கடந்த 21.02.2025ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு குன்னத்தூர் RI அலுவலகம் சென்று எடையபாளையம் VAO திரு.பிரபு அவர்களை சந்தித்து உரிமை சான்று மற்றும் சிட்டா வேண்டும் என்று கேட்டேன். அதற்கு சில ஆவணங்களை சமர்ப்பிக்க சொன்னார். பின்னர் அவர் கேட்ட ஆவணங்களுடன் கடந்த 26.02.2025ம் தேதி நேரில் எடையபாளையம் VAO அலுவலகம் சென்று உரிமை சான்று, சிட்டா, அடங்கல், FMB sketch மற்றும் நில கந்தைய ரசீது வாங்கினேன். அதன் பின்னர் நான் மீண்டும் கடந்த 27.02.2025ம் தேதி இணையம் மூலம் இலவச மின் இணைப்பு கேட்டு விண்ணப்பத்தை பதிந்து பதிவு எண்.200040590225201 என்ற ஒப்புகை சீட்டையும் பெற்றுக் கொண்டேன். அந்த விண்ணப்பத்தில் இணைத்துள்ள ஆவணங்களில், நில உரிமை சான்றில் ரீ.ச.எண். தவறாக உள்ளதாகவும், சிட்டாவில் சாரதாமணி பெயர் இணைக்கப்படவில்லை என்பதால் மனுவை நிறுத்தி வைத்துள்ளதாகவும், நில உரிமைச் சான்றில் திருத்தம் செய்தும் சிட்டாவில் சாரதாமணி பெயரை சேர்த்தும் கொடுக்குமாறு டவுன் குன்னத்தூர் மின் வாரிய AE அவர்கள் கூறினார்கள். அதனால் நான் பூமிதாரர்களான திரு.சசிகுமார் மற்றும் சாரதாமணி ஆகியோரிடம் பட்டாவில் சாரதாமணி பெயரை சேர்க்கவும், நில உரிமை சான்றில் திருத்தம் செய்யவும் எழுத்து பூர்வமாக அங்கீகார கடிதம் பெற்றுக் கொண்டு கடந்த 04.03.2025ம் தேதி எடையபாளையம் VAO அலுவலகம் சென்றேன். அங்கு எடையபாளையம் VAO திரு.பிரபு இல்லாத காரணத்தினால் அங்கு VAO அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த கவிதா என்பவர் சிட்டாவில் பெயர் சேர்க்க வேண்டுமானால் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும் என்று கூறினார். அதனால் நான் குன்னத்தூரில் இருந்த இ-சேவை மையத்தில் இணையம் மூலம் பட்டா எண் 373ன் சிட்டாவில் சாரதாமணி என்ற பெயரை சேர்க்க வேண்டி விண்ணப்பித்து CAN No.13332012277988 விண்ணப்ப எண்.2025/0103/32/646197 என்ற ஒப்புகை சீட்டை பெற்றுக் கொண்டேன். அன்றைய தினம் நான் எனது கைபேசி எண்9585896965 லிருந்து ஊத்துக்குளி தாலுக்கா, எடையபாளையம் VAO,

07/3/25

திரு.பிரபு அவர்களை அவரது கைபேசி எண் 98422 97912ல் தொடர்பு கொண்ட போது அவர் எனது அழைப்பை ஏற்கவில்லை. நான் அங்கு வேலை பார்க்கும் கவிதாவிடம் கேட்ட போது அவர் மீட்டீங்கிற்கு சென்றுள்ளதாக கூறியதால் நான் அவரை பார்க்காமல் வந்துவிட்டேன். மீண்டும் கடந்த 5.3.2025ம் தேதி காலை நான் எடையபாளையம் VAO அலுவலகம் சென்றேன். அங்கு VAO திரு.பிரபு அவர்கள் இல்லை. அதனால் சுமார் 11.30 மணிக்கு நான் எனது கைபேசி எண்9585896965 லிருந்து எடையபாளையம் VAO திரு.பிரபு அவர்களை அவரது கைபேசி எண் 98422 97912ல் தொடர்பு கொண்டு சிட்டாவில் சாரதாமணி அவர்களின் பெயர் சேர்க்கை தொடர்பாக பேசினேன். அவர் என்னை நேரில் திருப்பூர் RDO அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். அதனால் நான் 05.03.2025ம் தேதி பகல் சுமார் 1.30 மணிக்கு VAO திரு.பிரபு அவர்களை திருப்பூர் RDO அலுவலகத்தில் நேரில் சந்தித்து அவரிடம் உரிமை சான்று தவறு உள்ளதாக கூறிய போது அவர் உரிமை சான்றில் தவறாக இருந்த சர்வே எண்ணை திருத்தம் செய்து கையொப்பமிட்டு கொடுத்துவிட்டார். புதிய உரிமை சான்று தேவையில்லை என்றும் கூறினார். நான் சிட்டாவில் சாரதாமணி பெயர் சேர்க்கை செய்ய வேண்டும் என்றும் அதற்கான ஒப்புகை சீட்டை அவரிடம் கொடுத்த போது அவர் வாங்க மறுத்து சிட்டாவில் திருத்தம் செய்ய அவர் பரிந்துரை செய்வதற்கு ரூ.10,000/- லஞ்சமாக கொடுத்தால்தான் செய்ய முடியும் என்று சொன்னார். நான் பணம் இல்லை என்று கூறியதற்கு பூமிதாரர்களிடமிருந்து பெற்று தருமாறு கூறினார். நான் பூமிதாரர்களிடம் கேட்ட போது அவர்கள் சிட்டா சேர்க்கைக்கு ரூ.10,000/- லஞ்சம் என்பது அதிக பணம் என்று கூறிவிட்டார்கள். அதனால் நான் மீண்டும் நேற்று 6.3.2025ம் தேதி பகல் சுமார் 1.00 மணிக்கு ஊத்துக்குளி தாலுக்கா எடையபாளையம் VAO திரு.பிரபு அவர்களை காண சென்றேன். அவர் அங்கு இல்லாததால் குன்னத்தூரில் உள்ள RI ஆபீசிற்கு பகல் சுமார் 1.30 மணிக்கு சென்றேன். அப்போது VAO திரு.பிரபு அங்கு இல்லை. சிறிது நேரம் காத்திருந்த பிறகு வந்தார். நான் உரிமை சான்றில் தவறுள்ளதாக கூறியபோது, புதிய உரிமை சான்றை அங்கு வேலை பார்க்கும் கவிதாவை தயார் செய்ய சொன்னார். பின்னர் அவரிடம் பூமிதாரர்களான திரு.சசிகுமார் மற்றும் திருமதி.சாரதாமணி ஆகியோர் சிட்டாவில் பெயர் சேர்க்க ரூ.10,000/-அதிகமாக உள்ளதாக தெரிவிக்கிறார்கள் என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.3,000/- குறைத்து ரூ.7,000/- கொடுத்தால் சிட்டாவில் பெயர் சேர்க்கிறேன். ஏற்கனவே சிட்டாவில் சேர்த்த P.சசிகுமார் பெயருக்கு பணம் தரவில்லை. அதனால் ரூ.7,000/- கொடுத்தால்தான் சிட்டாவில் சாரதாமணி பெயர் சேர்க்க பரிந்துரை செய்வேன் என்று கண்டிப்புடன் கூறிவிட்டார். நான் பதில் கூறாமல் நின்று கொண்டிருந்தேன். அப்போது அங்கு கவிதா நில உரிமை சான்றை எழுதி

Aruguttalakshmi
07/3/25

கொண்டு வந்து VAO திரு.பிரபு அவர்களிடம் கையொப்பம் பெற்றார். அதில் கையொப்பமிட்ட VAO திரு.பிரபு அவர்கள் பழைய உரிமை சான்றை என்னிடம் வாங்கி கிழித்து விட்டார். நான் சிட்டாவில் பெயர் சேர்க்க இணையம் மூலம் விண்ணப்பித்து பெற்ற ஒப்புகை சீட்டின் நகலை VAO திரு.பிரபு அவர்களிடம் கொடுத்த பிறகு அவர் வாங்க மறுத்து, சிட்டாவில் பெயர் சேர்க்க தான் பரிந்துரை செய்ய ரூ.7,000/-த்துடன் நாளை வந்து ஒப்புகை சீட்டு, ஆவணங்கள் மற்றும் பணத்தையும் கவிதாவிடம் நாளை காலை எடையபாளையம் அலுவலகத்தில் கொடுத்து விடுங்கள் என்று கூறினார். கவிதாவும் சரி என்று சொல்லிவிட்டு சென்றார். நான் உரிமை சான்றை பெற்று கொண்டு வந்துவிட்டேன். நான் வந்து பூமிதாரர்களிடம் கேட்ட போது அவர்களுக்கு புதிதாக கிரையம் பெற்ற விவசாய பூமியின் சிட்டாவில் விடுபட்ட பெயரான திருமதி.சாரதாமணி அவர்களின் பெயர் சேர்க்க ஊத்துக்குளி தாலுக்கா, எடையபாளையம் VAO திரு.பிரபு அவர்களுக்கு ரூ.7,000/- லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. எனக்கும் விருப்பமில்லை. அதனால் கொமரகவுண்டன்பாளையம் கிராமம், சர்வே எண். 25/3A, பட்டா எண். 373ல் திருமதி.சாரதாமணி பெயரை சிட்டாவில் சேர்க்க பரிந்துரை செய்ய ரூ.7,000/- லஞ்சம் கேட்கும் எடையபாளையம் VAO திரு.பிரபு அவர்கள் மீதும், அவருக்கு உறுதுணையாக பணம் பெறும் திருமதி.கவிதா ஆகியோர் மீது சட்டபடியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd (xxxxx) (R.K.கார்த்திகேயன்) Sir,Received the complaint on 07.03.2025 at 07.00 hrs and made preliminary verification between 07.00 hrs and 07.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.1/2025/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 07.03.2025 at 07.30 hrs. Sd/- xxxx (B.Geethalakshmi). 07.03.2025 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of R.K.Karthikeyan, S/o.R.Kandhasamy, D.No.3, Amman Nagar, Murugampalaym, Vanjipalayam Post, Avinashi Taluk, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

07/03/25

(B.Geethalakshmi),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.